மு. ஸ்ரீநாகேஷ்
மக்கள் தொடர்பு மேலாளர்

க.எண்.செகுவா /பகுதி5/செய்திதாள்/ 2009 நாள் 10.12.2009

பெறுநர்
ஆசிரியர்,
தினமணி நாளிதழ்,
பிளாட் எண்.29, கதவு எண்.83
2வது மெயின் ரோடு
அம்பத்துார் தொழிற்பேட்டை
சென்னை 600 058.

அய்யா,

பொருள் : சென்னைக் குடிநீர் வாரியம் –பகுதி 5 – சென்னை சென்னை விருகம்பாக்கம் காந்தி நகர் முதல் மெயின் ரோட்டில் கழிவுநீர் சாலையில் வழிந்தோடுவதாக வெளியான செய்தி – பதில் அளித்தல்.

பார்வை : தினமணி நாள் 23.11.2009 .

---

பார்வையில் குறிப்பிட்டுள்ள தங்கள் நாளிதழில் சென்னை விருகம்பாக்கம் காந்தி நகர் முதல் மெயின் ரோட்டில் கழிவுநீர் குழாயிலிருந்து வெளியேறி சாலையில் ஓடுவதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெரிவிப்பது யாதெனில், தற்பொழுது பெய்துள்ள மழையின் காரணமாக விருகம்பாக்கம் காந்தி நகர் முதல் மெயின் ரோட்டில் மழைநீர் குளம் போல் தேங்கி நிற்கிறது. மேலும் இப்பகுதியில் மழைநீர் வடிகால் கால்வாய் இல்லாததால் மழைநீர் வெளியேற்ற வழியில்லை. இது தவிர பொது மக்கள் கழிவுநீர் ஆள்நுழைவாயிலை திறந்து மழைநீரை வெளியேற்ற முயற்சிக்கும் போது அதிலிருந்து கழிவுநீர் மழை நீருடன் கலந்து விடுகிறது. எனினும் தேங்கியிருந்த கழிவுநீர் லாரியின் மூலம் நீக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த பகுதியில் இருந்த கழிவுநீர் அடைப்பும் நீக்கப்பட்டு விட்டது என தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்களுடைய மக்கள் பணியில் தங்களின் ஆதரவை தொடர்ந்து வழங்கக் கோரும்,

மக்கள் தொடர்பு மேலாளர்

pdfMachine - is a pdf writer that produces quality PDF files with ease!
Get yours now!
“Thank you very much! I can use Acrobat Distiller or the Acrobat PDFWriter but I consider your product a lot easier to use and much preferable to Adobe's" A.Sarras - USA